முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (15.2.2025) தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான நான்காவது மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர். ககன்தீப் சிங் பேடி, துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அரசு சாரா அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடல் ஆமைகளைப் பாதுகாக்க

விசைப் படகுகளில் நவீன கருவி பொருத்தப்படும்!

அமைச்சர் க.பொன்முடி பேட்டி!

சென்னை, பிப். 16-

“கடல் ஆமைகளைப் பாதுகாக்க விசைப்படகுகளில் நவீன கருவி பொருத்தப்பட்டு படகின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும் என அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

தமிழக வனத்துறை, மீன் வளத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கடலோர காவல்படை, இந்திய கடற்படை மற்றும் கடல் ஆமை பாதுகாப்பில் உள்ள தன்னார்வ அமைப்பினர் கலந்து கொண்ட கடல் ஆமைகள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம், சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அமைச்சர் பொன்முடி அளித்த பேட்டி வருமாறு:-

வேட்டையாட தடை செய்யப்பட்ட பட்டியலில் ஆமைகள் உள்ளன. முட்டையிடும் காலகட்டத்தில் அவை கடற்கரையில் இருந்து 5 கடல்மைல் (9 கி.மீ.) தூரத்திற்கு வருகின்றன. அந்த 9 கி.மீ. பகுதியில் நாட்டுப் படகில் சென்று மீன் பிடிப்பதினால் பிரச்சினைகள் எழுவதில்லை. ஆனால் விசைப் படகுகள் செல்லும்போது ஆமைகளுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த பகுதியில் விசைப்படகுகள் மூலம் மீன் பிடிக்கும் போது ஆமைகளும் சிக்கிவிடுகின்றன. இதை தடுப்பதற்காக வனத் துறை மற்றும் மீன்வளத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

கடல் ஆமைகளைப் பாதுகாப்பதில் மீனவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அவை மீன்பிடி வலைகளில் சிக்கி இறந்துவிடக் கூடாது என்பதுதான் அரசின் நோக்கம். எனவே இதுகுறித்து மீனவர்களிடையே ஒரு கருத்தை உருவாக்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணியில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள். இதற்கான விசைப் படகுகளில் ஒரு நவீன கருவி பொருத்தப்பட்டு, அதன் மூலம் படகின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும். மீன்வளத் துறை இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் க. பொன்முடி கூறினார்.

கியூட் மற்றும் பிற NTA தேர்வுகளை தமிழில் நடத்த வேண்டும்!

ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்கு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கடிதம்!

சென்னை, பிப். 16 -

CUET PG மற்றும் பிற NTA தேர்வுகளை தமிழ் உள்ளிட்ட எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் நடத்த வேண்டும் எனவும், விண்ணப்ப கட்டணத்தினை குறைக்க வேண்டுமெனவும், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய கல்வித்துறை அமைச்சர்தர்மேந்திர பிரதானுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

மாணவர்களின் மொழியியல் பின்னணியை கருத்தில் கொண்டு, CUET PG மற்றும் பிற NTA நடத்தும் நுழைவுத் தேர்வுகளை தமிழ் மற்றும் அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் நடத்த வேண்டியதன் அவசியத்தை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளில் மொழி உள்ளடக்கம் என்பது பல்வேறு மொழி சார்ந்த மாணவர்களுக்கு சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கு மிகவும் அவசியமானது.

முந்தைய கோரிக்கைகள் இருந்தபோதிலும், CUET PG 2025 தேர்வுகள் இன்னும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு மற்றும் பிற இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் மொழித் தடைகள் காரணமாக தரமான கல்வியை அணுகுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்தத் தேர்வுகளை தமிழ் மற்றும் பிற பிராந்திய மொழிகளில் நடத்துவது, உள்ளடக்கம் மற்றும் நியாயத்தை ஊக்குவிக்கும்.

மேலும், கடந்த ஆண்டுகளில் CUET PG விண்ணப்பக் கட்டணம் உயர்ந்துள்ளது மாணவர்கள் மீது நிதிச் சுமையை அதிகரித்துள்ளது. விண்ணப்பதாரர்களுக்கான கட்டணம் 2023இல் ரூ.1000 இல் இருந்து 2024இல் ரூ.1200 ஆகவும், தற்போது 2025இல் ரூ.1400 ஆகவும் உயர்ந்துள்ளது.

அதேபோல், SC/ST விண்ணப்பதாரர்களுக்கும் கட்டணம் 2023இல் ரூ.750இல் இருந்து 2024இல் ரூ.900 ஆகவும், 2025இல் ரூ.1100 ஆகவும் உயர்ந்துள்ளது. உயர் கல்வி அனைவருக்கும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும், மேலும் விண்ணப்பக் கட்டணம் உயர்வு பல தகுதியான மாணவர்கள் விண்ணப்பிப்பதைத் தடுக்க வழிவகை செய்கிறது.

இந்த விவகாரத்தில், ஒன்றிய அரசை பின்வருமாறு வலியுறுத்துகிறேன்:

1. அனைத்து மாணவர்களுக்கும் சமமான வாய்ப்புகளை உறுதி செய்ய CUET PG மற்றும் பிற NTA நடத்தும் நுழைவுத் தேர்வுகளை தமிழ் மற்றும் எட்டாவது அட்டவணை மொழிகள் அனைத்திலும் நடத்த வேண்டும்.

2. CUET PG விண்ணப்பக் கட்டணத்தின் வருடாந்திர உயர்வை மறுபரிசீலனை செய்து, இந்தத் தேர்வுகளை குறைவான கட்டணத்தில் அணுகக்கூடியதாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு
பிப்ரவரி 16 (1978)



கழகம் தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர், கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், வெளியீட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

1953களில் தீப்பொறி என்ற ஏட்டை சொந்தமாக நடத்தினார். 1959களில் இனமுழக்கம் என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார்.

சிந்தனையை கிளறிவிடும் பேச்சாளர். நாடகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் சி.பி.சிற்றரசு அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கச் செய்தார்.

1989ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு “சிந்தனைசிற்பி சிற்றரசு” பெயரை தலைவர் கலைஞர் சூட்டினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இலவசங்கள் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதி கவாய் கருத்து

மக்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களை கவனத்தில் கொள்ளவில்லை!

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் பிருந்தா காரத் விமர்சனம்!

புதுடெல்லி, பிப். 16 -

இலவசங்கள் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதி கவாயின் கருத்துகள் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கான போராட்டங்களை கவனத்தில் கொள்ளவில்லை என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சித்துள்ளது.

நகர்ப்புறங்களில் வீடற்ற நபர்களின் தங்குமிடம் மற்றும் அவர்களின் உரிமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய் மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் ஆகியோர் அமர்வு முன் அண்மையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இலவச ரேஷன் மற்றும் நிதி உதவித் திட்டங்களால் வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு இல்லாமல் போய் விடுவதாக நீதிபதி பி.ஆர்.கவாய் கருத்து தெரிவித்தார்.

இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் பிருந்தா காரத், நீதிபதி பி.ஆர்.கவாய்க்கு கடிதம் ஒன்றை எழுதி உள்ளார். அதில்,

அரசுகளிடம் இருந்து சலுகைகளைப் பெறும் ஏழை எளிய மக்களுக்கு எதிரான பாரபட்சமாக சிந்தனையை உருவாக்கும் என்றும், எனவே நீதிபதி தனது கருத்துகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். மாநில அரசுகளால் பெண்களுக்கு வழங்கப்படும் நேரடி பணப் பலன்களை இலவசங்கள் அல்ல என்றும், அவற்றை சமூக இழப்பீடாக கருத வேண்டும் என்றும் என பிருந்தா காரத் சுட்டிக்காட்டி உள்ளார்.

ஊதியம் இல்லாத வீட்டு வேலைகளில் ஈடுபடும் பெண்கள் வாரத்திற்கு சுமார் 50 மணிநேரம் உழைப்பதாகவும், வீட்டிற்கு வெளியே ஊதியம் பெறும் வேலை செய்யும் பெண்களுக்கு, வீட்டு வேலையின் சுமை அவர்களின் தினசரி வேலை பளுவை பல மடங்கு அதிகரிக்கச் செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண்களின் ஊதியம் பெறாத வேலையின் அளவை பணமாக்கினால், அது ஆண்டுக்கு 22 லட்சம் கோடி ரூபாயாக இருக்கும், இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 7 சதவீதமாக இருக்கும் என பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி உள்ள பிருந்தா காரத், நீதிபதி கவாயின் கருத்துகள் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கான போராட்டங்களை கவனத்தில் கொள்ளவில்லை என்றும் விமர்சித்துள்ளார்.

எங்களுக்குப் பாடம் நடத்த வேண்டாம்! தமிழ்நாட்டு மக்களையும்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் இறையாண்மையையும் அவமதிக்காதீர்!

ஆளுநருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பதிலடி!

சென்னை, பிப்.16–

தமிழ்நாட்டிற்கு எது சிறந்தது என்று எங்களுக்குப் பாடம் நடத்த வேண்டாம் என்றும், தமிழ்நாட்டு மக்களையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் இறையாண்மையையும் அவமதிக்காதீர்கள் என்றும், ஆளுநருக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களின் அறிக்கை வருமாறு:–

தமிழ்நாடு ஆளுநரின் கருத்துகள் அரசியல் சட்ட வரம்புகளை ஒவ்வொரு நாளும் மீறி வருகின்றன. அவரது சட்டவிரோத மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரான நடவடிக்கைகள் தற்போது உச்சநீதிமன்றத்தில் கேள்விக் குள்ளாக்கப்பட்டு நீதிமன்றத்தால் எழுப்பப்பட்ட அவதானிப்புகள் மற்றும் கேள்விகள் அனைத்து செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களில் வெளியானது.

கண்ணியமில்லாத ஆளுநர்!

முதலமைச்சர் @mkstalin அவர்கள், தமிழ்நாடு ஆளுநரின் நடத்தை குறித்து இந்து ஆங்கில நாளிதழின் இன்றைய கட்டுரையை முன்னிலைப்படுத்தியதில் என்ன தவறு உள்ளது? முதலமைச்சர் தனது X தள ட்வீட் பதிவில் நீதிமன்ற நடவடிக்கைகள் எதையும் குறிப்பிடவில்லை. இருப்பினும் பதிலடி என்ற போர்வையில், பதவிக் காலம் முடிந்துவிட்ட நிலையில், வேறு பதவியை பெற நினைக்கும் கவர்னர், டில்லியில் உள்ள உயரதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க, தகாத செயல்களில் ஈடுபட்டு வருகிறார். அவரது ட்வீட் ஆளுநராக அவரது கண்ணியம் இல்லாததை வெளிப்படுத்துகிறது. மேலும் அரசியலமைப்பு சட்டத்தால் வழங்கிய பதவியை அரசியல்மயமாக்கிக் கொண்டுள்ளார் என்பதை நிரூபிப்பதாக உள்ளது.

பா.ஜ.க.வால் நியமிக்கப்பட்ட ஏஜெண்ட்!

தி இந்து பத்திரிக்கையானது நன்மதிப்பை பெற்ற செய்தித்தாள். அதன் வரலாறு முழுக்க சுதந்திரமான மற்றும் அதீத நேர்மையை கடைப்பிடித்து ஒருமைப்பாட்டினை காக்கும் வகையில் இருந்துவருகிறது. சாவர்க்கரையும் கோட்சேவையும் பின்பற்றுபவர்களுக்கு நேர்மை என்பது அந்நியமானதாக இருந்தாலும், மாநில ஆளுநர் பத்திரிகைகளை அவமதிக்கக் கூடாது என்பதைத்தான் பொதுமக்கள் எதிர்பார்ப்பர். கவர்னர் தனது ட்வீட்டில் எந்த ட்விட்டர் கணக்குகளை குறிப்பிட்டு இணைந்துள்ளார் என்பதை பார்க்கும் போது வேடிக்கையாக உள்ளது. ஒரு வேளை அவர் அந்த தனிநபர்கள் மற்றும் செய்தி நிறுவனங்களின் ஆதரவை எதிர்பார்க்கிறாரா.? அவர் தமிழ்நாடு அரசின் அரசியல் எதிரியாக செயல்பட்டு ஆளுநர் மாளிகையை தவறாகப் பயன்படுத்தவில்லையா?

அரசியல் பாதுகாப்பின்மை மற்றும் தமிழ்நாட்டு மக்களைப் புரிந்து கொள்வதை பற்றி ஆளுநர் பேசுகிறார். அரசியல் பற்றி வகுப்பெடுக்க இந்தியாவில் எங்காவது ஒரு இடத்தில் தேர்தலில் போட்டியிட்டுள்ளாரா ஆளுநர்? அவர் பா.ஜ.க.வால் நியமிக்கப்பட்ட வெறுப்பு நிறைந்த ஏஜெண்ட் மட்டுமே.

தமிழ்நாட்டு மக்களையும் தி.மு.க. வினையும் உண்மையிலேயே ஆளுநர் புரிந்து கொள்ள விரும்பினால் அவரது பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்து அவரே தேர்ந்தெடுக்கும் ஏதாவதொரு சட்டமன்ற தொகுதியில் நின்று தேர்தலில் போட்டியிடுமாறு அழைக்கிறோம். நோட்டாவிற்கு கீழ் வாக்குகள் வாங்குவதையாவது தவிர்ப்பாரா என்று பார்ப்போம்.

எங்களுக்குப் பாடம் நடத்த வேண்டாம்!

கவர்னர் அவர்களே, ஆட்சியைப் பற்றி உங்களிடமிருந்து எங்களுக்கு எந்த விரிவுரைகளும் தேவையில்லை. இந்த மாநிலம் கல்வியில் #1 இடத்தில் உள்ளது. தொழில், வேலைவாய்ப்பு மற்றும் பிற நல்லாட்சி குறியீடுகளில் முன்னணியில் உள்ளது. நீங்கள் வருவதற்கு முன்பே நாங்கள் ஒரு செழிப்பான நிலையை அடைந்துள்ளோம். தமிழ் நாட்டிற்கு எது சிறந்தது என்று எங்களுக்குப் பாடம் நடத்த வேண்டாம். அதற்குப் பதிலாக அரசியலமைப்பு மற்றும் அதன் விழுமியங்களுக்கு மதிப்பளியுங்கள். மாறாக தமிழ்நாட்டு மக்களையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் இறையாண்மையையும் அவமதிக்காதீர்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்திய நில விவகாரம்:

40 ஆண்டு கால பிரச்சினைக்கு தீர்வு காண ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குழு!

வீட்டு வசதித்துறை அமைச்சர் எஸ்.முத்துசாமி பேட்டி!

சென்னை, பிப். 16-

வீட்டு வசதி வாரியத்தால் எடுக்கப்பட்ட நிலங்களின் உண்மை நிலை அறியாமல் அதை வாங்கி குடியிருப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த நிலத்தை விடு விப்பது தொடர்பாக ஆய்வு செய்ய ஓய்வுபெற்ற 2 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமையில் குழு அமைத்துள்ளதாகவும், இக்குழு அளிக்கும் பரிந்துரையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அமைச்சர் சு.முத்துசாமி தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

வீட்டு வசதிவாரியத்தின் சார்பில் 40 ஆண்டுகளுக்கு முன் இடங்கள் எடுக்கப்பட்டு, ஆரம்பகட்ட பணியாக அதற்கான நோட்டீஸ் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் எந்த நடவடிக்கையும் அதில் எடுக்கப்படவில்லை. இதுகுறித்த மனுக்கள் வந்த போது, மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை சரி செய்ய முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார். எனவே, இந்த மாதிரியான பிரச்சினை உள்ள இடங்களை கண்டறிய வாரியத்தின் சார்பில் 16 இடங்களில் புகார் பெட்டிகளை வைத்து கோரிக்கைகள் பெறப்பட்டன. இதன் மீது வாரியமே இதில் நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்காது என்பதால், கமிட்டி அமைத்து பரிந்துரை பெற முடிவெடுக்கப்பட்டது.

இதுவரை நோட்டீஸ் கொடுத்து வீட்டு வசதி வாரியம் எடுத்துள்ள நிலங்கள் 5 வகையாக பிரிக்கப்பட்டன. ஐந்து வகைகளில், முதல் இரண்டில் வாரியம் நோட்டீஸ் அளித்துள்ளதுடன், எந்த பணமும் கொடுக்காத அளவில் நிற்கிறது. அதில் நிலத்தை திருப்பிக் கொடுப்பதில் பிரச்சினை இல்லை என்பதால், நீதிமன்ற வழக்குகள் உள்ள இடத்தை ஒதுக்கிவிட்டு 1,500 ஏக்கர் அளவுக்கு உத்தரவு முதல்வரால் வழங்கப்பட்டது.

அதன்பின் தற்போது 1,800 ஏக்கர் நிலத்தை விடு விக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் குறித்து ஆய்வு நடைபெறுகிறது. 3 மற்றும் 4-ம் வகை நிலங்களை பொறுத்தவரை, வீட்டுவசதி வாரியம் அந்த நிலத்துக்கான தொகையை சில உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ளது. பெறாதவர்களுக்கு நீதிமன்றத்திலும், வருவாய்த்துறையிலும் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும், 40 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்காததால், உண்மை நிலையை கூறாமல் அந்த இடங்களை உரிமையாளர்கள் பலருக்கு விற்றுள்ளனர். இதில் பிரச்சினை இருக்கிறது என்பதே தெரியாமல் அவர்கள் வாங்கியுள்ளனர். அவர்களுக்கும் பாதிப்பின்றி நிலத்தை விடு விக்க 2 ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பணிகளை தொடங்கியுள்ளனர். ஏப்ரல் இறுதிக்குள் பரிந்துரைகள் பெறப்பட்டு அதன்பின், நடவடிக்கை எடுக்கப்படும். ஐந்தாவது வகையை பொறுத்தவரை, வீட்டுவசதி வாரியம் முழுமையாக நிலத்தை எடுத்து, அதில் ஒரு பகுதியை மேம்பாடு செய்துள்ள நிலையில் மீதமுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். ஆக்கிரமித்தவர்களிடம் இடத்தை கோருவோம். அதில் அவர்கள் கட்டிடம் கட்டியிருக்கும் பட்சத்தில், இன்றைய தேதியில் வாரியம் விற்பதாக இருந்தால் என்ன தொகை அந்த இடத்துக்கு நிர்ணயிக்கப்படுமோ, அந்த தொகையை செலுத்தி எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதால் எந்த சலுகையும் கிடையாது. வீட்டுவசதி வாரிய இடங்களில் தளப்பரப்பு குறியீடு தொடர்பாக சீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பேட்டியளித்தார்.